செய்தி வெளியீடு எண்:694 நாள்:22.08.2008

(திருத்தப்பட்டது)

# அரசு செய்தி வெளியீடு

சென்னை, முகப்பேர் பகுதியில் மத்திய தர மக்கள் வசிக்கக் கூடிய அளவில் பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட 170 குடியிருப்புகளை குலுக்கல் முறையில் விற்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அறிவிப்பு செய்துள்ளது. இதுவரை ஒன்றரை லட்சத்திற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் வந்துள்ளன. விண்ணப்பதாரர்களிடமிருந்து மனுவிற்காக 110 ரூபாயும், அதனை பூர்த்தி செய்து ஒப்படைக்கையில் பதிவுக் கட்டணமாக 400 ரூபாயும் வீட்டு வசதி வாரியத்தினால் பெறப் படுகிறது.

விண்ணப்பம் செய்தவர்களில் பெரும்பாலோர் ஏழை மற்றும் மத்திய தர மக்கள் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த வீடுகளுக்காக விண்ணப்பம் செய்து, செப்டம்பர் ***30***ந்தேதி நடைபெறவுள்ள குலுக்கலிலே கிடைக்காதவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் பெற்றுக் கொண்ட பதிவுக் கட்டணமான ரூபாய் நானூறை (ரூ. 400) மீண்டும் அவர்களிடம் திருப்பியளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9